பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 151

சனிக்கிழமை
26 ஏப்ரல் 2025

சித்திரை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஏப். 26
கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந் 11

அரசிடம் இனவாதம் இல்லையென்றால்

# திஸ்ஸ விகாரைக்கு தீர்வுவழங்கத் தயாரா?

கஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 26**

**தேசிய மக்கள் சக்தி இனவாதமற்ற கட்சியென்றால், தையிட்டியில் உள்ள சட்டவிரோத விகாரை உட்பட அத்தனை இனவாதச் செயற்பாடுகளையும் முடிவுக்குக்கொண்டுவர முடியுமா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.** 11



## அநுர அரசாங்கம் இரட்டை வேடம்!

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றும் போர்!

கிளிநொச்சி, ஏப். 26
காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிவழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் கூறுகின்றபோதிலும், அவர்கள் எம்மிடம் ஒருவாறாகவும், சர்வதேசத்திடம் 11



## இணையக் குற்றப்பிரிவு யாழில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 26
வடக்கில் இடம்பெறும் அனைத்து இணையக் குற்றங்கள் தொடர்பிலும் விரிவாக விசாரிக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை 11

அநுரவின் வருகையை முன்னிட்டு

## ஆர்ப்பாட்டங்களுக்கு தடைபோட மறுப்பு!

வவுனியா நீதிமன்றம் அதிரடி

வவுனியா, ஏப். 26
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வருகையை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு வவுனியா பொலிஸார் நீதிமன்றத்தில் தடைகோரிய 11

கிளிநொச்சி, வவுனியாவுக்கு

## இன்று வருகிறார் அநுர



கிளிநொச்சி, ஏப். 26
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 11



லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில்

## விசாரணைக்காக திங்களன்று முன்னிலையாகின்றார் ரணில்!

கொழும்பு, ஏப். 26
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ளார். ரணிலின் சட்டத்தரணியால், இந்த விடயம் விசாரணை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
சாமர சம்பத் தஸாநாயக்க ஊவா மாகாண முதல்வராக பதவிவகித்தபோது, இடம்பெற்றதாகக் 11

## 20 கிலோ கஞ்சாவுடன் பெண் கைது

கிளிநொச்சி, ஏப். 26
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 20 கிலோ கஞ்சாவுடன் 11



'நுணல் மட்டுமில்ல ரணிலும் தன்ர வாயாலதான் கெடுவார் கண்டியளோ'

## பஹல்காம் தாக்குதலுக்கு ஜனாதிபதி அநுர கண்டனம்

பிரதமர் மோடியுடனும் பேச்சு

கொழும்பு, ஏப். 26
காஷ்மிரின் பஹல்காம் பகுதியில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு, ஜனாதிபதி அநுர கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில், இந்தியப் பிரதமர் மோடியுடன் நேற்று மாலை 11

வவுனியாவில்

## லொறியுடன் மோதுண்டு பொலிஸ் அலுவலர் பலி

வவுனியா, ஏப். 26
வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த பொலிஸ் 11

## யாழில் நால்வருக்கு சிக்கன்குனியா!

யாழ்ப்பாணம், ஏப். 26
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நால்வருக்கு சிக்கன்குனியா உறுதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**கொவிசெத**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4054
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 05 39 47 56
விசேட எழுத்து A

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1121
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 14 19 28 45

**NLB ஜய**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0080
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 3 9 9 4

**மெகா பவர்**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2160
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 04 06 41 42

**மஹஜன சம்பத**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5812
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 7 7 3 7 9 1

**தன நிதானய**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1842
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 14 23 26 72
விசேட எழுத்து I

**அத சம்பத**
திகதி 25.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0387
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 3 7 9 1

# வரி அதிகரிப்பு இணைக்கப்பாடு கூட்டு அறிக்கையே அவசியம்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து



கொழும்பு, ஏப்.26

**ட்ரம்பின் வரி அதிகரிப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி ஏற்றுமதி வருமானத்தை எவ்வாறு தக்கவைப்பது என்பதைச் சிந்திக்கவேண்டும். அமெரிக்கா சென்ற இலங்கைக்குழு வரி குறைப்புத் தொடர்பாக இணக்கப்பாடு எட்டியதாக ஒரு தகவலும் இல்லை.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழலைத் தடுப்பதற்கு நாம் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு ஆயிரம் தடவை சிந்திக்க வேண்டும் என ஜனாதிபதி கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அரசாங்கம் விடுக்கும் மறைமுக அச்சுறுத்தலே இதுவாகும். அமெரிக்கா சென்ற இலங்கைப் பிரதிநிதிகள் குழு எந்தவித இணக்கப்பாட்டையும் எட்டியதாக எமக்குத் தகவல் கிடைக்கவில்லை. இது தொடர்பில் கூட்டு அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றோம். ஜனாதிபதிக்கு நான் வழங்கிய ஆலோசனையில் நாட்டைச் சூழவுள்ள மதில்களைத் தகர்த்து பொருளாதாரப் பாலங்களை அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறில்லை எனில் இந்த அரசாங்கம் அடுத்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 சதவீதமாகக் குறைத்துவிடும்- என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0520
DLB
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 1 7 3 4 2 5

**Super Ball** DLB
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2786
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 39 40 58 76

**சனிதா** DLB
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 06 28 66 75
வெற்றி வாரம் 4947

**SASIRI** DLB
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0669
வெற்றி இலக்கம் 16 17 22

**லக்ன ராசி**
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம் 14 16 24 59
சீட்டிழுப்பு வாரம் 4498
DLB

**KAPRUKA** DLB
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கம் 09 32 40 52
வெற்றி வாரம் 1962

**அத கோடிபதி** DLB
திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கம் 35 38 68 75
வெற்றி வாரம் 2612

# இக்கட்டான நேரங்களில் இந்தியாவுடன் நிற்போம்

## மோடிக்கு ரணில் கடிதம்

கொழும்பு, ஏப்.26

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயங்கரவாதத் தாக்குதல் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கும் அதேநேரம், இக்கட்டான சூழ்நிலைகளில் நாம் எப்போதும் இந்தியாவுடன் நிற்போம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

பஹல்காமில் நடந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல், சுற்றுலாப்பயணிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்பன அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக பிரிவினைவாத பயங்கரவாதத்தின் மோதலை சகித்துக் கொண்ட நாம், மிக நீண்ட காலத்துக்கு முன்பு, வன்முறை ஒருபோதும் தீர்வாகாது என்பதில் உறுதியாக இருந்தோம். ஏனெனில் அது வலியையும் இழப்பையும் மட்டுமே நிலைநிறுத்துகிறது என்பதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். உண்மையில், இந்தக் குற்றச் செயல், தீவிரவாதத்தின் தீங்கான தாக்கத்தை அப்பட்டமாக நினைவூட்டுவதாக உள்ளது.

உங்கள் தலைமையின் கீழ் இந்தியா பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ளாது என்று நம்புகின்றோம். சர்வதேச அரங்கில் உள்ள நாம் அனைவரும் சமாதான கலாசாரத்துடன் கூடிய எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் ஒன்றுபடுவதற்கு இது சரியான நேரம் ஆகும் - என்றுள்ளது. (எ-இ)

# வீட்டுத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படும்

## கிளிநொச்சியில் அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 26

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தியாக்க எமது அரசாங்கத்தால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகைதந்த அவர் மாவட்டபதில் செயலரை மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி, அறிவியல்நகர் நகர அபிவிருத்தி, மாவட்டத்தின் குடிதண்ணீர் விநியோகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதன்பின்பு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். (ச-25,113)



# ட்ரம்பின் வரி எதிரொலி; வாகன விலைகள் எகிறும்!

கொழும்பு, ஏப்.26

அமெரிக்க ஜனாதிபதி விதித்துள்ள வரியால் இலங்கையின் வாகன இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த வரியால் ஜப்பானில் இருந்து இறக்குமதிசெய்யப்படும் வாகனத்தின் வரி சுமார் 20 வீதம் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.



இது தொடர்பில் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் அரோஷா ரோட்ரிகோ தெரிவித்துள்ளதாவது - ஜப்பானின் நாணயமான யென்னின் பெறுமதி 1.95 ஆகக் காணப்பட்ட நிலையில் அது தற்போது 2.15 வரை அதிகரித்துள்ளது. யென் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு வாகன விலையில் 20 சதவீத அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கும். இதனால் இந்த வாரம் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகளில் பாதிப்பு ஏற்படும்.

டொலர், பவுண்ட் போன்ற முக்கிய நாணயங்களின் பெறுமதியின் அதிகரிப்பு இலங்கையின் வாகன இறக்குமதியைக் கடுமையாகப் பாதித்துள்ளது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைக்கு உள்ளாகும் 'ஸ்ரீ தலதா வந்தனாவ'

## இதுவரை நால்வர் உயிரிழப்பு

**கண்டி , ஏப்.26**

**கண்டி தலதா மாளிகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புனித தந்தத்தை தரிசிப்பதற்காகச் சென்றவர்களில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கண்டி தேசிய மருத்துவமனையின் இயக்குநர் இரேஸா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- உயிரிழந்த நால்வரும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும், உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் ஒருவர் மாரடைப்பால் இறந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. ஏனைய மூவரின் இறப்புகள் தொடர்பாக பகுப்பாய்வுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஏழு நாள்களில், பல்வேறு மருத்துவ நிலைமை களுக்கான சிகிச்சைக்காக கண்டி தேசிய மருத்துவமனையில் சுமார் 300 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் நீரிழப்புக் காரணமாக மயக்கமடைந்தவர்களாவர். தற்போது, தலதாமாளிகைக்கு அருகில் ஒன்பது சுகாதார மையங்கள் செயற்பட்டுகின்றன. அவற்றின் மூலம் சுமார் 3 ஆயிரம் பேர் மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்-என்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுவரும் ஸ்ரீதலதா வந்தனாவ சமய நிகழ்வு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

இந்த நிகழ்வுக்கு போதியளவு ஒழுங்கமைப்புகள் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். பல கிலோமீற்றர் தூரம் வரையில் மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## வாக்காளர்கள் அட்டைகள் இன்றுமுதல் விநியோகம்

கொழும்பு, ஏப். 26

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று 26 ஆம் திகதியும் நாளை 27 ஆம் திகதியும் விநியோகிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் இறுதித்தினம் ஏப்ரல் 29 ஆம் திகதியாகும். 29 ஆம் திகதிக்குப் பின்னரும் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தேருநர் இடாப்பில் பதிவுசெய்த முகவரிக்கு உரிய தபால் நிலையத்துக்குச் சென்று தங்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## புகைப்பிடித்தவாறு மீன் வியாபாரம்! ரூ.10,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஏப். 26

புகைப்பிடித்தவாறு மீன்வியாபாரத்தில் ஈடுபட மீன் வியாபாரிக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் சந்தைப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்ட மீன் வியாபாரிக்கு எதிராக மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகர் கி. அஜந்தன் மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, மீன் வியாபாரி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து, வியாபாரியை கடுமையாக எச்சரித்த மன்று 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (ச-20)

## வத்திக்கானுக்கு விஜித பயணம்

கொழும்பு, ஏப். 26

நித்திய இளைப்பாறிய பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனையில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் விஜித ஹேரத் கலந்துகொள்ளவுள்ளார். புனிதர் பிரான்சிஸ் திருத்தந்தையின் இறுதி ஆராத்னை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புனித பேதுரு பசிலிக்காவின் புனித பேதுரு சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை அமைச்சருடன் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் காவிந்த ஜெயவர்தன, ஹெக்டர் அப்புஹாமி ஆகியோரும் வத்திக்கானுக்குப் பயணமாகியுள்ளனர். (ச-இ)



## விற்பனை செய்யப்படும் 27 அரச வாகனங்கள்

கொழும்பு, ஏப். 26

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான மேலும் 27 சொகுசு மற்றும் செயலிழந்த வாகனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான விலைகள் கேள்வி அறிவிப்பு மூலம் கோரப்பட்டுள்ளன. ஏல விற்பனைக்கான கேள்விகோரலுக்கான கட்டணத்தை எதிர்வரும் மே 14 ஆம் திகதி வரை ஜனாதிபதி செயலகத்தின் நிதிப் பிரிவில் செலுத்தமுடியும் ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 14 சொகுசு வாகனங்கள், 6 செயலிழந்த வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கான ஏலம் பெப்ரவரி 28 ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

வெப்பநிலை பேணாது

## யோக்கட்கள் எடுத்துச்சென்ற சாரதிக்கு 30,000 தண்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 26

உரிய வெப்பநிலையைப் பேணாது யோக்கட்களை வாகனத்தில் எடுத்துச்சென்ற சாரதிக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்று 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், கைப்பற்றப்பட்ட யோக்கட்களை அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. யோக்கட்களை 6 செல்சியஸ் வெப்பநிலையில் கூலர் வாகனத்தில் எடுத்துச்செல்ல வேண்டிய நிலையில் அதன் வெப்பநிலையை அதிகரித்து 18 செல்சியஸ் வெப்ப நிலையில் கடைகளுக்கு விநியோகிக்கக் கொண்டுசென்ற வாகனச் சாரதிக்கு எதிராக அராலி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-26 20)




**யா**ழ்ப்பாணம் எண்டு சொன்னால் ரண்டு விசயம் எல்லாருக்கும் நினைவுக்கு வரும். ஒண்டு நல்லூர், இன்னொண்டு முருங்கைக்காய். யாழ்ப்பாணத்து முருங்கைக்காய்க்கெண்டு எல்லா இடமும் தனி மதிப்பு இருக்கு. மண்ணின்ர தன்மையாலையோ, தண்ணியின்ர தன்மையாலையோ, இல்லாட்டி யாழ்ப்பாணத்துக் கால நிலையாலையோ இஞ்சத்தை முருங்கைக்காய்க்கு தனி ருசியும், வாசமும் எண்டு எல்லாரும் சொல்லுவினம். அப்பிடிப்பட்ட முருங்கைக்காய்க்கு கண்ணூறு பட்டிட்டுது. இந்தமுறை முருங்கைக்காய் தோட்டம் செய்தவையெல்லாம் தலையில கைவைச்சபடி இருக்கினம். வழக்கமா இந்த சீசனில முருங்கைக் காய் காய்ச்சுக் கொட்டும். முருங்கைக் காய் தோட்டம் வைச்சவையும் அதைக் கொழும்புக்கோ, வெளிநாட்டுக்கோ, தம்புள்ளைக்கோ அனுப்பி லட்சக்கணக்கில உழைப்பினம்.

முருங்கைக்கு செலவும் குறைவு, கனக்கப் பாடுபடவும் தேவையில்லை. இடைக்கிடை இறைச்சால் காணும். பூச்சியடிக்காமல் மருந்தடிச்சு, பருவத்தில உரம் போட்டால் முருங்கை மரம் காசு காய்க்கிற மரமா மாறிடும். இப்பிடித்தான் இவ்வளவுநாளும் இருந்தது. ஆனால் இந்த முறை என்ன நடந்ததோ தெரியேலை, மரத்தில பூப்பிடிக்குது. ஆனால் அது பிஞ்சுபிடிக்காமல் உடனேயே கொட்டுண்டுதாம். என்னென்னவோ மருந்தெல்லாம் அடிச்சுப் பார்த்தும் ஒண்டுக்கும் சரிவரேலை எண்டு தோட்டக்காரர் புலம்புகினம். சிலர் உடனேயே முருங்கையை அழிச்சுப்போட்டு, வேற பயிர் வைக்கினம். இதுக்கு என்ன காரணம் எண்டு விவசாயத்துக்குப் பொறுப்பா இருக்கிறவைதான் கண்டுபிடிச்சுத் தீர்வு சொல்லோணும். ஆனால் அவையள் தங்கடபாடு.

இப்பிடித்தான் சுனாமிக்குப் பிறகு முள்ளு முருங்கையில யானைக்கால் மாதிரி இலையெல்லாம் கட்டி கட்டியா வந்து , காய்ஞ்சு கறுத்து கடைசியில அழிஞ்சேபோட்டுது. இப்ப முள்ளுமுருங்கை, கலியாண முருங்கையளைக் கண்ணால காண்றதே அரிதாப் போட்டுது. முந்தி எல்லாரின்ர வீட்டுவேலியிலையும்கட்டாயம் முள்ளுமுருங்கை இருக்கும் . இப்ப கலியாண வீட்டுக்கு கன்னிக்கால் நடவே முள்ளுமுருங்கைக்கு காடுமேடெல்லாம் அலைஞ்சுதான் கண்டுபிடிக்கவேண்டிக் கிடக்கு. முள்ளுமுருங்கைக்கு ஏன் அப்பிடி வந்தது? எப்பிடி அதைத் தடுக்கலாம்? எண்டு இண்டுவரைக்கும் ஒருத்தரும் ஆராய்ச்சியும் செய்யேலை. மாற்றுவழியும் சொல்லேலை. அதைமாதிரி இப்ப தென்னையளுக்கு வெள்ளைப்பூச்சி பிடிச்சு, அதுகளும் ஓலை கருகி பட்டுபோடுமோ என்ட நிலைமை. அதோட சேர்த்து இப்ப கறி முருங்கைக்கும் பூத்துப்போட்டு, காய்க்காமல் பேய்க்காட்டுற வருத்தம் தொத்திட்டுது. இனிமேல் இப்பிடி எங்கட கண்டுகாலிக்கு கண்டகண்ட வருத்தங்கள் எல்லாம் வந்து உதுகள் எல்லாம் இல்லாமல் போகப்போகுதோ எண்டுதான் பயமாக்கிடக்கு. உரியவை இனியாவது கண்ணைத் திறந்து இதுகளுக்கு சரியான தீர்வைக் கண்டுபிடிப்பினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டுநீங்கும். வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். அவசியத்தேவை என்றாலும்கூட கடன் வாங்கவேண்டாம்.

**இடபம்:** தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச்செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்கள்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் திடீர்ச் செலவுகளும், பணியாளர்களால் வீண் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** சகோதரர்கள் பணம்கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு வேலை விஷயமாக வெளியில் செல்லநேரிடும்.

**விருச்சிகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். பிள்ளைகள்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**மகரம்:** தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் செயற்படுவீர்கள். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்குக் குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** இன்று நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதகமாக முடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாகக் கிடைக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

# பிளேஓவ் வாய்ப்பை இழந்தது சென்னை!

## ஹைதராபாத்துடன் நேற்றும் தோல்வி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னையைத் தோற்கடித்தது ஹைதராபாத். இந்தத் தோல்வியைத் தொடர்ந்து, நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பிளேஓவ் வாய்ப்பை இழந்த இரண்டாவது அணியாக சென்னை பதிவானது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரேவிஸ் 42 ஓட்டங்களையும், ஆயுஷ் மாத்ரே 30 ஓட்டங்களையும், தீபக் ஹூடா 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்ஷல் பட்டேல் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கும் ஆரம்பம் தடுமாற்றமாகவே அமைந்தது. ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார் அபிஷேக் சர்மா. ஹெட்டும் மந்தமான இன்னிங்ஸையே கட்டமைத்து 19 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். எனினும் இஷான் கிஷான் ஓர் முனையில் பொறுப்பாக விளையாடி 44 ஓட்டங்களைப் பெற்றார். கலீல் அஹமட், காம்போஜ் மற்றும் ஜடேஜா ஆகியோர் கட்டுக்கோப்பாக பந்துவீசிய போதிலும், சாம் கரன் மற்றும் நூர் அஹமட் இருவரும் ஓட்டங்களை வாரிவழங்கினார்கள். நூர் அஹமட் 4 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களையும், சாம் கரன் 2 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்தனர். இந்த ஓவர்கள் சென்னைக்குப் பின்னடைவைக் கொடுக்க ஹைதராபாத் அணி 8 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது. (ம)






## தமிழரசுக் கட்சியின் பரப்புரைக்கூட்டம்!

கொடிகாமம், ஏப்.26

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதி உள்ளூராட்சிசபைத் தேர்தல் பரப்புரைக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகாமையில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி தொகுதிக் கிளைத்தலைவர் கே.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் சாவகச்சேரி தொகுதிக் கிளைச் செயலாளர் ச.தங்கராசா தொடக்கவுரையையும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் எழுச்சியுரையையும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் சிறப்புரையையும், சாவகச்சேரி நகரசபை முன்னாள் தவிசாளர் திருமதி சிவகங்கை இராமநாதன் நன்றியுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (ச-41-159)

## போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ். வலயக் கல்வி அலுவலகம் முறைசாராக் கல்விப்பிரிவினால் தையல், சிகையலங்காரம் ஆகிய பயிற்சிநெறிகளுக்கான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடைய போதனாசிரியர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.வலயக்கல்வி அலுவலகக் கல்வி அபிவிருத்திப்பிரிவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-25)

## உள்ளூர் உற்பத்தி மாதாந்தச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 26

ஏப்ரல் மாதத்துக்கான உள்ளூர் உற்பத்தியாளர்களின் மாதாந்தச்சந்தை நிகழ்வு உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக வீதியோரத்தில் நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றி தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25.66)

## தவறான முடிவெடுத்து ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஏப். 26

வவுனியா போகஸ்வெள பகுதியில் போத்தலால் தன்னைத் தானே தாக்கிய நபரொருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று மாலை போத்தல் ஒன்றின் மூலம் தனது வயிற்றுப்பகுதியில் குத்தியுள்ளார்.

இதனால் காயமடைந்த அவர் வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மாறுதலுக்கு வளைந்துகொடுக்காத மனிதன் மாளவேண்டியதுதான்.

– தந்தை பெரியார் –

# ஒரு சீர்திருத்தவாதியின் இதயம்!

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸின் புகழுடல் இன்று வத்திக்கானில் நல்லடக்கம் செய்யப்படுகின்றது. ஏழு அடுக்குப் பாதுகாப்புகளுக்கு மத்தியில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உள்ளிட்ட உலகத்தலைவர்கள் திரண்டிருக்கையில் திருத்தந்தை விடைபெறவுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு கத்தோலிக்க மதத்தலைவராக இருந்தாலும், அவர் ஒருபோதும் தன்னை 'கத்தோலிக்கர்களுக்கான தலைவர்' என்ற வரையறைக்குள் சிறுமைப்படுத்தியதில்லை. உலகின் ஆகச்சிறந்த சீர்திருத்தவாதியாகவே அவர் வாழ்ந்தார் ' இறந்தார் ' நிலைபெற்றார்.

அதிகாரத்தரப்புகள் எவரும், ஏதோவொரு விடயத்தில் தம்மை தற்காப்பு வளையத்துக்குள் வைத்திருக்கவே விரும்புவார்கள். ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் இந்த விடயத்தில் விதிவிலக்கானவர். இதற்கு முன்னர் இருந்த திருத்தந்தையர் எவரும் கற்பனைகூட செய்து பார்க்காத விடயங்களை அவர் சர்வசாதாரணமாகச் செயற்படுத்தினார். கத்தோலிக்கத் திருச்சபைகளால் அறிமுகப்படுத்தப்பட்ட வதிவிடப் பாடசாலைகளில் ஆதிக்குடிகளும், சிறார்களும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதை திருத்தந்தை பகிரங்கமாக ஏற்றிருந்தார். அத்துடன், அவர் தன் கடமை முடிந்தது என்றெண்ணவில்லை. அதற்காக மன்னிப்பும் கோரினார். கடந்தகால வரலாற்றுக்காகக் கண்ணீர் மல்கினார். அத்துடன், திருச்சபைக்குள் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் பாலியல் குற்றங்களையும் விசாரித்தார் - தண்டித்தார்.

வேதாகமத்தின்படி இயேசுக்கிறிஸ்துவின் இனக்குழுமமாக யூதர்கள் அறியப்படுகின்றார்கள். இஸ்ரேல் என்பது கிறிஸ்தவர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் உணர்வுடன் கலந்த 'உன்னத நிலப்பரப்பு'. காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இனப்படுகொலைகளை எந்தக்கிறிஸ்தவத் தலைவர்களும் அல்லது கத்தோலிக்கத் தலைவர்களும் கண்டித்ததாக அறிந்ததுண்டா? ஆனால், திருத்தந்தை கண்டித்தார். காஸாவில் துன்பப்படும் பலஸ்தீன மக்களுடன் ஒவ்வொருநாளும் உரையாடினார். இதற்காக அவர் சந்தித்த எதிர்ப்புகள் ஏராளம். திருத்தந்தையின் மறைவுக்காக வெளியிட்ட இரங்கல் செய்தியை, இஸ்ரேல் நீக்குமளவுக்கு அவரின் செயற்பாடுகள் பாவப்பட்ட பலஸ்தீனர்களுக்காகவும் நீதிக்காகவும் அமைந்தன.

'துறவறம் என்பது ஏழ்மையின் இலக்கணம்' என்று கூறினார். அதையே தன் வாழ்வாகக் கொண்டார். தன் சொத்துகளையெல்லாம் ஏழைகளிடம் பகிர்ந்து கொடுத்த புனித பிரான்சிஸ் அசிசியாரின் பெயரையே தன் பெயராக வரித்துக்கொண்டார். இதனால்தான் அவர் இன்னொரு ஜோன் பவுலாகவோ, இன்னொரு பெனடிக்ராகவோ அறியப்படாமல், 'முதலாம் பிரான்சிஸ்' என்று அறியப்படவேண்டும் என்று விரும்பினார். தன் சொத்துகளையெல்லாம் ஏழைகளுடன் பகிர்ந்தார். திருத்தந்தையின் ஊதியமான 32 ஆயிரம் டொலரை உதறித்தள்ளினார். பல அடுக்குப் பாதுகாப்பைக் குறைத்தார், ஆடம்பரங்களை அப்புறப்படுத்தினார். தன் பணிவாழ்வுமுதல் இறப்புவரை ஏழ்மையைப் பின்பற்றினார். அதனால்தான், ராஜாதிராஜர்களுக்குச் சற்றும் குறைவில்லாத, ஆடம்பர திருவுடல் பேழையைத் துறந்து, மிகச் சாதாரணமான திருவுடல் பேழையொன்றில் உறங்குகின்றார். அது மட்டுமல்ல, கடந்த நூறு வருடங்களின் பின்னர், வத்திக்கான் பசிலிக்காவுக்கு வெளியே அடக்கமாகும் திருத்தந்தையும் அவரே.

ஒரு சீர்திருத்தவாதியின் இதயம் எவ்வாறு இருக்கும் என்பதற்கான இலக்கணம் திருத்தந்தை பிரான்சிஸ். வேதாகமத்தை அவர் கற்பிக்கவில்லை மாறாக வாழ்ந்துகாட்டினார். அதனால்தான், காஸாவில் உள்ள இஸ்லாமியப் பலஸ்தீனர்கள் அழுது ஓலமிடும் அளவுக்கு அவரின் மறைவு அமைந்திருக்கின்றது.




## பொலிஸ் திணைக்களம் வழங்கும் சேவைகளின் கட்டணம் அதிகரிப்பு



**கொழும்பு, ஏப்.26**

**பொலிஸ் திணைக்களத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.**

இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய சகல பொலிஸ் நிலையங்களுக்கும் புதிய சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரத்துக்காக அறவிடப்பட்ட 300 ரூபா கட்டணம் 2 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் மோப்ப நாய்களை ஒன்றரை மணிநேரத்துக்கு வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அல்லது பாடசாலைக் கண்காட்சிகளுக்கு வழங்குவதற்கு அறவிடப்பட்ட 3 ஆயிரம் ரூபா கட்டணம், 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் குதிரைகளை ஒன்றரை மணிநேரத்துக்கு பொதுமக்களின் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் 6 ஆயிரம் ரூபாவில் இருந்து, 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையிலுள்ள பொலிஸ் நிலையமொன்றுக்கு வாகனமொன்றை இழுத்துச்செல்வதற்காக இதுவரை அறவிடப்பட்ட 600 ரூபா கட்டணம் ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கைவிரல் அடையாள அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக அறவிடப்பட்ட 150 ரூபா கட்டணம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுத் தேவைகளுக்காக இதுவரை கட்டணமின்றி வழங்கப்பட்ட பொலிஸ் சான்றிதழ், இனிவரும் காலங்களில் 300 ரூபா கட்டணம் அறவிடப்பட்ட பின்னரே வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஇ)

## மித்தெனிய முக்கொலை சந்தேகநபர் சிக்கினார்

கொழும்பு, ஏப்.26

மித்தெனிய பொலிஸ் பிரிவில், கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதியன்று நடந்த முக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் எனச் சந்தேகிக்கப்படும் நபர், இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச்சென்று போலியான பெயரில் அங்கு தங்கியிருந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (ச-41)

## வாக்காளர் அட்டைகளுடன் பெண் வேட்பாளர் கைது!

புத்தளம், ஏப்.26

சர்வஜன அதிகாரம் கட்சியின் புத்தளம் மாநகரசபைக்கான பெண் வேட்பாளர் ஒருவர் 85 வாக்காளர் அட்டைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். புத்தளம் ரத்மல்யாயப் பகுதியில் புத்தளம் உதவித்தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைதுநடவடிக்கை இடம்பெற்றது. (ச-41)



## குளவிக்கொட்டுக்கு இலக்காகிய மூதாட்டி

யாழ்ப்பாணம், ஏப். 26

பளை இத்தாவில் பகுதியில் வளவில் துப்புரவுப்பணியில் ஈடுபட்டிருந்த 68 வயது மூதாட்டியை கருங்குளவிகளின் தாக்கத்துக்குள்ளாகி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. (ச-25.9)

## மேல் மாகாணத்தில் சிக்கன்குனியா தீவிரம்

கொழும்பு, ஏப். 26

நாட்டில் அதிகளவான சிக்கன்குனியா நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். நாடளாவிய ரீதியில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 16 ஆயிரத்து 544 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் மேல் மாகாணத்தில் மட்டும் 7ஆயிரத்து 611 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் அதிகளவாக 2,709 பேரும், கம்பஹாவில் 2,453 பேரும், களுத்துறையில் 567 பேரும் பதிவாகியுள்ளனர். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
ஞாயிற்றுக்கிழமை -சித்திரை 14
27.04.2025
சுப நேரம் : 08.59 - 10.29
ராகுகாலம் : 04.29 - 05.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராமரிப்பின்றிய நிலையில் கொடிகாமம் பொதுச்சந்தை



## வியாபாரிகள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.26

கொடிகாமம் பொதுச்சந்தையின் பராமரிப்புத் தொடர்பில் சாவகச்சேரிப் பிரதேசசபையினர் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என்று வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சந்தையிலுள்ள மலசலகூடங்கள் பயன்படுத்தமுடியாமல் மிகவும் அசுத்தமான முறையில் காணப்படுகின்றன. அவற்றினை சாவகச்சேரிப் பிரதேசசபையினர் சுத்தம் செய்வதில்லை. அத்துடன் சந்தையில் சேரும் கழிவுப் பொருள்கள் உரியமுறையில் அகற்றப்படுவதில்லை. அதேவேளை கொடிகாமம் சந்தைக்கு அருகாமையிலுள்ள மரமொன்றை மக்களின் கருத்தையும் மீறி பிரதேசசபையினர் வெட்டி சாய்த்துள்ளனர். நிலவும் கடும் வெப்பத்தை ஈடுசெய்துமுடியாது மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் நிலையில் பிரதேசசபையினரின் இந்த நடவடிக்கை மோசமான செயலாகும் என்றும் வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-41-27)

# பூமரக்கன்றுகள் வெட்டிச் சாய்ப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 26

டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சூழலை அழகுபடுத்தும் முகமாக கல்லூரி சமூகத்தால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்பா புகையிரதப் பாதைக்கு அருகாமையில் நடப்பட்ட பூ மரங்களை ரயில்வே திணைக்களம் வெட்டிச் சாய்த்துள்ளது. இதற்குக் கல்லூரி சமூகமும், தென்மராட்சிப் பசுமை ஆர்வலர்களும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். இதுதொடர்பில் ரயில்வேத் திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது, ரயில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் நிலையில் அவை வளர்ந்து காணப்பட்டதால் வெட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-28)

## இணுவில் பொதுநூலக

# சதுரங்கப்போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப்.26

7 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வி. அபிநயன் (புற்றளை மகா வித்தியாலயம்), இரண்டாம் இடத்தை ப. ஆரணன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாம் இடத்தை ம.தரணீஸ் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 7 வயது பெண்கள் பிரிவில் ச.அக்சரா (கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை), ம. அர்ச்சிகா (அருணோதயாக் கல்லூரி), ஐ. அருளினியா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

9 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ஐ.அக் ஷிதன் (வட இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாம் இடத்தை வி. யஸ்வின் (சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாம் இடத்தை ஜெ. டீரக் (ஏ.ஏ.ஏ. கிராண்ட் மாஸ்டர் செஸ் பயிற்சிநிலையம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். 9 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை த.அஞ்சனா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) இரண்டாம் இடத்தை கு. திவேஜி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), மூன்றாம் இடத்தை அ. அவந்திகா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

11 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சி. கேசிகன் (ஏ.ஏ.ஏ கிராண்ட் மாஸ்டர் செஸ் பயிற்சி நிலையம்), இரண்டாம் இடத்தை இ. அக் ஷத் (ஸ்கார்பியன் செஸ் கிங்டம்) மூன்றாம் இடத்தை றி. மேஷாக் (ஏ.ஏ.ஏ கிராண்ட் மாஸ்டர் செஸ் பயிற்சி நிலையம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். 11 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை தி. ஜெஸ்மிகா, இரண்டாம் இடத்தை ரா. அக் ஷிதா (உடுவில் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடத்தை பி. பிரதிஸ்யா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 13 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ச. பவுல்றொபின்சன் (இந்துக் கல்லூரி), இரண்டாம் இடத்தை லி. சாயீசன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடத்தை கி. சுலக்கன் (பரியோவான் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். 13 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பி. காருண்யா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), இரண்டாம் இடத்தை ந. சிவாஞ்சலி (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), மூன்றாம் இடத்தை பி. விஸ்வாத்மிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

15 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை த. ஆதிரையன் (பரியோவான் கல்லூரி), இரண்டாம் இடத்தை கு. ஹரிஷ் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடத்தை பா. அபிவர்ஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். 15 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ரா. தாருகா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), இரண்டாம் இடத்தை ஜீ. பிரதிக்ஷா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), மூன்றாம் இடத்தை அ. நிதுஷனா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். 17 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கி.ஜோன் அருணன் (பரியோவான் கல்லூரி), இரண்டாம் இடத்தை இ.சீராளன் (பரியோவான் கல்லூரி), மூன்றாம் இடத்தை அ. சந்தோஷ் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். 17 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சி.லக்சா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), இரண்டாம் இடத்தை ச.திசோபனா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), மூன்றாம் இடத்தை ப.அபிராமி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

திறந்த வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வ.துஷியந்தன் (ஏ.ஏ.ஏ கிராண்ட் மாஸ்டர் செஸ் பயிற்சிநிலையம்), இரண்டாம் இடத்தை சி. மதுரங்கன் (ஏ.ஏ.ஏ கிராண்ட் மாஸ்டர் செஸ் பயிற்சிநிலையம்), மூன்றாம் இடத்தை செ.கஜலக்ஸ்மன் (நல்லூர் சென் பெனடிக்ற் ஆர்.சி.ரி.எம் வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

திறந்த வயதுப் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கு.கபினயா (சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி) இரண்டாம் இடத்தை உ.சுவஸ்திகா (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி), மூன்றாம் இடத்தை ச.கல்கி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இவர்களைத் தவிர மேலும் போட்டியில் பங்குபற்றியவர்களில் ஏனைய 157 மாணவர்களும் சிறப்புப் பரிசில்களை பெறவுள்ளனர். (ச-25)

# 108 கிலோ கஞ்சா முல்லையில் மீட்பு

## ஒருவர் கைது



முல்லைத்தீவு, ஏப். 26

முல்லைத்தீவு சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பொதிசெய்யப்பட்ட கஞ்சாக்களை கடத்த முற்பட்ட சந்தேகத்தில் ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைதானார்.

சந்தேகநபரிடமிருந்து 108 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் சான்றுப்பொருளுடன் மேலதிக விசாரணைக்காக புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-19)

# போலித்தேசியம் பேசுவோரை மக்கள் நிராகரிக்கவேண்டும்!

## வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

தேசியமக்கள் சக்தியையும் போலித்தமிழ்த்தேசியம் பேசுவோரையும் இம்முறை தமிழ்மக்கள் நிராகரிக்கவேண்டும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.வடமராட்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மாறி மாறி ஆட்சிக்குவரும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்வதில்லை. அதேபோன்றுதான் தற்போதைய தேசியமக்கள் சக்தி அரசாங்கமும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு இதுவரை எதனையும் செய்யவில்லை. இனிமேலும் இவர்கள் எதனையும் செய்யப்போவதில்லை. எனவே, எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்மக்கள் தேசியமக்கள் சக்தி போன்ற பெருந்தேசியவாதக் கட்சிகளுக்கும், போலித் தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகளுக்கும் வாக்களிக்கக் கூடாது - என்றார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணவர் கௌரவிப்பும் விளையாட்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம் , ஏப். 26

சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக்கழக வருடாந்த மாணவர் கௌரவிப்பும் , விளையாட்டு நிகழ்வுகளும் தலைவர் நீலவண்ணன் அனிஸ்ரன் தலைமையில் கலைமகள் கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எவ்.சி .சத்தியசோதி, கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் நடராஜா சிவரூபன், மென்பொருள் பொறியாளர் விமலாம்பிகைபாகன் திவாகரன், சுழிபுரம் மேற்கு சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,125)



## 'டிறிபேர்க்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்.சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா கல்லூரியின் விசேட அரங்கில் அண்மையில் இடம்பெற்றது.

முதலாம் நாள் மாலை அமர்வில் 'டிறிபேர்க்' மலர் வெளியீடு நடைபெற்றது. கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜன் நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதற்பிரதியை ரி.பி ஹன்ட் ஆர்ட் கலரி நிறுவனத்தின் ஸ்தாபகரும், இயக்குநருமான திருமதி யோகமணி அழகரட்ணம் பெற்றுக்கொண்டார். (ச-25,28)

## இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்தக் கலையரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 26

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாதாந்தக் கலையரங்கு மன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வயலின் இசை நிகழ்ச்சியில் ம.லோகேந்திரன், க.தஷாணன், சோ.சிவயெனன், கு.சயந்தன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக மிளிர்வார்கள். கலாநிதி திருமதி கிருபாசக்தி கருணாவின் நெறியாள்கையில் நிகழவுள்ள யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களின் குழு இசைக்கு கே.வேலதீபன், ம.லோகேந்திரன், பு.வேணுகாந்தன், சி.யூட் ஆகியோர் வாத்திய அணிசெய் கலைஞர்களாக பங்காற்றுவார்கள்.

கலைஞர் ப. சியாமின் இரட்டைவயலின் இசையரங்குக்கு அ.சண்முகப்பிரியன், மு.சுலக்சன், க.நந்தகுமார், நி.மோகனதர்ஷன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக இசைமீட்டுவார்கள். ஆர்வலர்களை இசையை இரசிக்க ஒன்றிணையுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25)

# விசுவாவசு



# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் - 2025




## தொட்டதெல்லாம் துலங்கும்

**மீன ராசிக்காரர்களுக்கு,**

ஆறாவது அறிவை அடிக்கடி பயன்படுத்தும் நீங்கள், நடுநிலை தவறாது செயற்படுபவர்கள். உங்கள் ராசிக்கு 8 ஆவது ராசியில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் சொந்த வீடு வாங்கும் கனவு பலிக்கும். பொருளாதாரநிலை திருப்திகரமாக அமையும். தடைபட்டுக் கொண்டிருந்த சில காரியங்களை சாதித்துக்காட்டுவீர்கள்.

மே 14ஆம் திகதிமுதல் குருபகவான் 4இல் நின்று பலன் தரப்போவதால் எதிலும் உணர்ச்சிவயப்படாமல் முடிவெடுப்பது அவசியம். சேமிப்புகள் கரையும். குடும்பத்தில் சச்சரவுகள் எழாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். புகுந்த வீட்டு உறவுகளிடம் வீண்வாக்குவாதம் வேண்டாம். பிறந்த வீட்டு பெருமையை எப்போதும் கூறிக்கொண்டிருக்காதீர்கள். குருவின் பார்வை பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கிறது. கணவன் மனைவிக்குள் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்று வீர்கள். மகனின் உயர்கல்வியில் கூடுதல் கவனஞ்செலுத்துவீர்கள். புதுப்புது எண்ணங்கள் மனதில் தோன்றும். மகனின் கெட்டபழக்கவழக்கங்களை கண்டித்து அவர்களை மீட்பீர்கள்.

நீண்டநாள் பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள். அந்நிய நண்பர்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். பணிக்குச்செல்லும் பெண்களுக்கு மகிழ்ச்சியான சூழல் உண்டாகும். சிலருக்குப் புது வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். மே 18 ஆம் திகதி நடக்கும் ராகு கேது பெயர்ச்சியும் உங்களுக்குச் சாதகமே. தோற்றப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் தாமதம் இல்லாமல் வரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். மனைவிக்கு கால்வலி, கழுத்து வலி வந்து நீங்கும். வீண்சந்தேகம் வேண்டாம். அண்டை அயலாரின் ஆதரவு கிடைக்கும். தடைகள் உடைபடும். முகப்பரு, வயிற்றுவலி நீங்கும். முடிவெடுப்பதில் அவசரம் வேண்டாம். பெற்றோரின் ஆலோசனையை கேட்டு செயற்படுங்கள். கல்யாணம் கூடி வரும். உயர்கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஆண்டின் பிற்பகுதியில் அதீத முன்னேற்றம் உண்டாகும். தடாலடியாக சில மாற்றங்களைச் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். எனினும் வேலைச்சுமைகள் அதிகரித்துக் கொண்டேபோகும். சக ஊழியர்களின் பணிகளையும் சேர்த்துப் பார்க்கவேண்டி வரும். மேலதிகாரி உங்களுக்கு இணக்கமாக இருப்பார். எப்போதும் யாரையும் குறைகூறிக்கொண்டிருக்கவேண்டாம். புறம் பேசுவதையும் நிறுத்திக் கொள்ளவும். நிறுவனத்தின் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் வெளிநாடு செல்லக் கூடும். அதுவும் நன்மைக்கே. கலைத்துறையினருக்கு தள்ளிப்போய்க்கொண்டிருந்த வாய்ப்புகள் கதவைத் தட்டும். சோம்பலைத் தவிர்த்து சுறுசுறுப்பாவீர்கள். யாரையும் விமர்சித்துப் பேசாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கப் பழகிக்கொள்வது நல்லது.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு, தடைகளைத் தாண்டி உங்களை முன்னேற வைப்பதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
11 . 12 . 1954

மறைவு
23 . 04 . 2025

## அமரர் நடராசா துரைராசசிங்கம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா துரைராசசிங்கம் அவர்கள் நேற்று (23.04.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-வாலாம்பிகை தம்பதியரின் அருமை மகனும் கணபதிப்பிள்ளை-அன்னப்பிள்ளையின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், சர்மிளா, சர்மிலன், சதீஸ் தயாபாலன் (அமரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகாந்தன், அனுசா ஆகியோரின் மாமனாரும், அனந்சன், அன்சிகா, அக்ஷயன் அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் பாலசுப்பிரமணியம் (அமரர்), லோகநாயகி (அமர்), பாக்கியலட்சுமி (அமரர்), மல்லிகாதேவி, தங்கராசா வசந்தாதேவி, சிவகுமார், விமலாதேவி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இறுதி அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் உச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி நுணாவில்
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்
077 667 3624

(CR 44844) V-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
26 . 08 . 1940

மறைவு
20 . 04 . 2025

## இராசையா வைத்திலிங்கம்

நல்லூர் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வைத்திலிங்கம் கடந்த 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் , காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பூபதி தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் , காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் கண்மணி காலஞ்சென்ற சரசுவதி மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சண்முகவேல் , வேலுப்பிள்ளை மற்றும் வடிவேல் , செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் , நாகராசா , சிவசிதம்பரம் காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் இந்திரன் , ஈஸ்வரி , சத்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் , மனோராணி , ஜெகதாம்பிகை , குணரத்தினம் , ஜீவாகரன், நாகேஸ்வரி , காலம்சென்ற சத்தியசீலன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கின்றோம்.

17/4 இ நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
மனைவி - 077 802 5830
[illegible] - 076 930 3807
+1(917) 767 0348

# காணி வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் Stanly Road இல் அமைந்துள்ள Store Room உடன் கூடிய 3 1/2 பரப்பு காணி வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
**076 565 2122**

# நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல இனத்தவர்கள் அரச, அரசசார்பற்ற உள்நாடு, வெளிநாடு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உண்டு. உங்களுக்கு ஏற்றவாறு துரிதமாக செயல்படுத்தித்தரப்படும்.

தொடர்புகளுக்கு: வீ.ஜெயந்தி
**077 973 3183**

(CS/3028) J-1

# Vacancy-Quantity surveyor and technical officer

1. Quantity surveyor (QS)
   - A bachelor's degree in quantity surveying or a related field
   - Minimum 2 years' experience
2. Assistant Quantity surveyor (AQS)
   - NVQ-4 qualification in a relevant field
3. Technical Officer (Civil)
   - Diploma in civil engineering/ NCT (Civil) or equivalent qualification
   - Minimum 2 years' experience
4. Technical Assistant
   - Relevant working experience

Send your CV to royalbuilders1983@gmail.com or
WhatsApp: **077 724 5399**

(CS 3029) V-1

# வீரர்களின் போர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப். 26

23 ஆவது வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, யாழ் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிகளுக்கிடையலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது பாடசாலைகளின் முதல்வர்கள், அணித்தலைவர்கள் கலந்துகொண்டு கருத்துகளைத் தெரிவித்தனர்.

இப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-33-125)

# மரண அறிவித்தல்



தோற்றம்
04 . 06 . 1953

மறைவு
24 . 04 . 2025

## திருமதி சாவித்திரிதேவி யோகதாசன்

கோவிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாவித்திரி தேவி யோகதாசன் (ஓய்வு பெற்ற உப அதிபர், ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், அரியாலை) அவர்கள் நேற்றுமுன்தினம் (24.04.2025) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - மனோரஞ்சிதம் தம்பதியரின் பாசமிகு புத்திரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகதாசனின் அன்பு மனைவியும், யோகவிநாயகன் (Dubai), கார்த்திகா ஆகியோரின் அருமைத் தாயாரும், சுவேதா (Dubai), கலைச்செல்வன் ஆசிரியர் (மு/ மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கௌரிதேவி (UK), பாலகேதீஸ்வரன் (Canada), அமரர் சாந்திநிகேதன், தமயந்திதேவி, நளாயினிதேவி, சந்திரமௌலீசன், சாயிலக்ஷ்மி ஆகியோரின் அன்புச்சகோதரியும், பத்மநாதன் (UK), கௌசலாதேவி (கனடா), கருணானந்தன், சிவபாலா, தயாநிதி, நேசகுமார், யோகராணி (Australia), யோகேஸ்வரி, யோகானந்தன் (Netharland), யோகசெல்வம் (Canada), யோகநாதன் ஆகியோரின் மைத்துனியும், அதிசய சொரூபி - ஜெயந்தன் (UK), நர்த்தன சொரூபனின் (USA) சிறியதாயும், சிவகாமி அன்ட்று (USA), சாயீசன் மயூரி (கனடா), சிவமைந்தன், கௌரிபாலனின் மாமியாரும், சக்திநாயகி பத்மரூபன், நிற்சிந்தன், சிவாஜினி கிரிசாந்தன், சிவானுஜன், தானியாவின் (Australia) பெரியதாயாரும், லெவானா, ஹரேஷ், ஈசன், கீனன், சேன், நிலாமீனாட்சி, ஜீவாஆனந், கணியன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோவிலாக்கண்டி கைதடியிலுள்ள அவரின் இல்லத்தில் (பரிமளவாசம்) நாளை மறுதினம் (28.04.2025) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக காந்தளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிலாக்கண்டி,
கைதடி, நாவற்குழி.

தகவல்:
திரு சோ யோகதாசன் (துணைவர்)
071 011 4990, 0778367408

(CS/58090) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

யாழ்.,ஏப். 26 மட்டுவில் கிழக்கு ஞான தீபம் முன்பள்ளி சிறார்க ளின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப. 2.30 மணிக்கு ஞான தீப முன்பள்ளி நிலைய மைதானத்தில் ஞானதீபம் முன்பள்ளியின் தலைவர் திருமதி லக்சியா ஜீவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஒய்வுநிலை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அரியநாயகம் சரோஜினிதேவி கலந்து கொள்ளவுள்ளார்.

(ச-33-131)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 06 . 1937



மறைவு 23 . 04 . 2025

## திருநாவுக்கரசு பாலசிங்கம்

(ரஜனி கிறீம் ஹவுஸ் முன்னாள் உரிமையாளர் யாழ்ப்பாணம் வவுனியா)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், சொய்சபுர மொரட்டுவவை வசிப்பிடமாகவும். கொண்ட திருநாவுக்கரசு பாலசிங்கம் அவர்கள் கடந்த (23. 04. 2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லலிதாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ரஜனி மற்றும் நஞ்சித்குமாரின் (டென்மார்க்). பாசமிகு தந்தையும், சுமதியின் (டென்மார்க்) அன்பு மாமாவும், பிரியன், சைலா, மாயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, மகேஸ்வரி, மற்றும் துரைசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் (C18, G 1. soysapura, moratuwa) நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
நஞ்சித்குமார் : 0094 112 624 487

(CS/58084) J-1

# 1. ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்...

மலர்வு 15 06 1942



உதிர்வு 07 05 2024

அமரர்
## கிட்டிணபிள்ளை நாகராசா

திதி - சதுர்த்தசி

ஆண்டுகள் ஒன்று உருண்டோடி மறைந்தாலும்
அகலாது உங்கள் அன்பு
முகம் எம் நெஞ்சை விட்டு
அன்போடும் பாசத்தோடும் அரவணைத்த
எங்கள் அன்புத் தந்தையே

ஏங்குகின்றோம் உங்கள் பாசத்திற்காய்
ஆறாத்துயருடன் அன்பையும் பாசத்தையும் காட்டி
உங்கள் கண்களுக்குள் வைத்து வழிகாட்டி
வளர்த்தீர்கள்

உங்கள் வாழ்வில் எல்லாவற்றையும்
எமக்காகத் தந்து எங்கள் உயர்வே உங்கள்
ஒரே இலட்சியமாய் கொண்டு வாழ்ந்தீர்கள்
ஐயா

உங்களுடன் வாழ்ந்த நிமிடங்கள்
எங்கள் வாழ்வில் சுடர் விடும் ஒளியாய்
மலர்கின்றன
ஆண்டொன்று ஆனாலும் அழியாத அன்புருவமாய்
என்றும்

வாழ்வீர்கள் எங்கள் நெஞ்சங்களில்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்

தகவல்:குடும்பத்தினர்

உள்ளூராட்சித் தேர்தலுக்காக
# மே 5ஆம், 6ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு விடுமுறை

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக, மே மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சு பரிசீலித்து வந்தது. இந்த நிலையிலேயே, மே மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை மே மாதம் 4ஆம் திகதி கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ம-இ)

# கலை, கட்டட வடிவமைப்பு ஆவணகத்தின் 87 ஆவது உரை

இலங்கை சமகால கலை, கட்டட மற்றும் வடிவமைப்புக்கான ஆவணகத்தினால் வழங்கப்படும் உரைத்தொடர்களின் வரிசையில், 87 ஆவது உரை நிகழ்வு இல.199, நல்லூர் வீதியிலுள்ள மேற்படி ஆவணகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கூட்டிணைவு மற்றும் சந்திப்பு இடங்கள் போன்றனவற்றின் மூலம் புலம்பெயர் வேர்களை ஆராய்தல்' எனும் தொனிப்பொருளில் நோர்வேயைச் சேர்ந்த தமிழ்க்கலைஞரான சஞ்சய் சுரேஸ்குமார் உரையாற்றவுள்ளார். இந்த நிகழ்வில் கலை மற்றும் ஊடக ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)

# மரண அறிவித்தல்

மலர்வு 26 . 12 . 1952



உதிர்வு 22 . 04 . 2025

## இராசதுரை தவமணி

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை தவமணி அவர்கள் கடந்த (22.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையா இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராசா (மல்லாகம்), பூலோகராசா (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயபூபதி (ஜெயா), இராஜேஸ்வரி (ராசாத்தி - கொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சுதாஜினி (சித்ரா - கனடா), சுகந்தன் (பிரான்ஸ்), சிவாஜினி (சுவிஸ்), அனுராதா (ஜேர்மனி), கவிதா (சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோகரன் (கனடா), தேவகி (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரபா - சுவிஸ்), விவேகானந்தன் (கண்ணன் - ஜேர்மனி), திருக்குமரன் (திரு - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், செல்வராணி மற்றும் இரட்ணகுபேரன் (கனடா), இராஜசிங்கம், இராஜேந்திரன் (கனடா), காலஞ்சென்ற சற்குணம் ஆகியோரின் மைத்துனியும், மனோஜன், நபினா (கனடா), வைதேகி, யசிதா (பிரான்ஸ்), பவதாரணி, கௌதமன், அஸ்வினி (சுவிஸ்), அபிரா, சகானா, ஆத்விகன் (கிருஸ்ணா - ஜேர்மனி), ஜானகி, வினோதினி, திவ்விகன் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்
மகள் - திருக்குமரன் - கவிதா - 074 119 1983
தம்பி - கந்தையா நாகராசா - 077 070 5358

(CS/58061) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 1/3 பகுதியினர் வறுமையின் பிடிக்குள்!

## இவ்வாண்டு மேலும் உயரலாமென உலக வங்கி கணிப்பு

**கொழும்பு, ஏப்.26**

**இலங்கை 2024 ஆம் ஆண்டு எதிர்பார்த்ததைவிட அதிகமாக வளர்ச்சி கண்டிருந்தாலும், மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதி தற்போதும் வறுமையில் அல்லது மீண்டும் வறுமைக்குள் செல்வதற்கான அபாயத்திலும் உள்ளனர் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.**

மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கான உலக வங்கி பிராந்தியப் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்புநிலை சிறப்பாக இருக்கின்றது. இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக தொழிற்றுறை மற்றும் சேவைத்துறைகள், குறிப்பாக கட்டடத்துறை மற்றும் சுற்றுலா தொடர்பான சேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனினும் இந்த வளர்ச்சி எல்லோருக்கும் சமமாகப் பயனளிக்கவில்லை. குறிப்பாக வறுமையில் வாழ்பவர்களுக்குக் கூடுதல் உதவிகள் வழங்கப்படவேண்டிய அவசியம் உள்ளது.

இதற்காக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் வறியவர்களுக்கு உதவும் கொள்கைகள் மீது கவனஞ்செலுத்தவேண்டும்.

2025 ஆம் ஆண்டில், உலகளாவிய பொருளாதார நிலைமைகள், எதிர்பாராத வர்த்தகக்கொள்கை மாற்றங்கள், மற்றும் உள்ளக கட்டமைப்புச் சிக்கல்கள் காரணமாக இலங்கையின் வளர்ச்சி 3.5% வரை குறைவடையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

வடமராட்சி கொத்தணியிடம்

# பனை அபிவிருத்தி சபையால் திக்கம் வடிசாலை கையளிப்பு

சுமார் முப்பது ஆண்டுகளாக இயங்காமலிருந்த திக்கம் வடிசாலையை மீண்டும் வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதடி பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன், திக்கம் வடிவசாலை வளாகத்தில் வைத்து பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்களின் வடமராட்சி கொத்தணியிடம் உத்தியோகபூர்வமாகக் கடிதத்தை கையளித்தார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி, தென்மராட்சி உட்பட யாழ். மாவட்டத்தின் பல்வேறு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள், கொத்தணிகள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், பணிப்பாளர்கள், பனை அபிவிருத்தி சபை பணிப்பாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காலத்தில் குறித்த வடிசாலை தென்னிலங்கையிலுள்ள ஒருவருக்கு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டே இன்று வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-27)



2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொலிஸ் நிலையங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் இதன் போது வாக்களித்தனர். (ச-113)


## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 08 . 1961



மறைவு
24 . 04 . 2025

**சரகணபவன் உமாசுதன்**

**(ஓய்வு நிலை உப அதிபர் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியர் யா/ நயினதீவு மகா வித்தியாலயம், யா/ செங்குந்த இந்துக் கல்லூரி)**

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும் நயினாதீவினை புகுந்த இடமாகவும், கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட சரகணபவன்-உமாசுதன் (24.04.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற சரகணபவன் விநாயக விசாலாட்சியின் பாசமிகு மகனும் நயினாதீவினை சேர்ந்த சுந்தரமூர்த்தி விசாலாட்சி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் தேவாதேவி (தேவா)யின் பாசமிகு கணவரும் சுவர்னிகா சுவர்னிகன் மாணவர்கள் (யா/ இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணநாயகி சசிகலாஆகியோரின் அன்புச் சகோதரனும் பேரின்பநாயகம் (ஜேர்மனி), நவநேசன் (J.P ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகுணாதேவி (ஜேர்மனி), நளினி ஆசிரியர் (யா/ இருபாலை கந்தவேள் அ.த.க பாடசாலை) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், சசிதரன் ஆகியோரின் மைத்துனரும் விக்னா (ஜேர்மனி), நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

117G.P.S றோட்
கல்வியங்காடு

தேவா (மனைவி) 077 723 3825
ஈசன் (மைத்துனர்) 077 691 0634
பேரின்பநாயகம் (மைத்துனர்)

(CS 3033) V-1



## மரண அறிவித்தல்



**குட்டித்தம்பி பராசக்தி**

சிறுப்பிட்டி மத்தியை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட குட்டித்தம்பி பராசக்தி அவர்கள் (24.04.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா-பொன்னம்மா தம்பதியின் அன்பு மகளும், குட்டித்தம்பியன் பாசமிகு மனைவியும் திருமதி இதயா சிவநேசனின் (இலண்டன்) அன்புத் தாயாரும், ஹரீஸ், கிருஷான், சஞ்சனா (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான திருமதி நடராஜா தனநாயகி, திருமதி கடம்பவன நாயகி இரத்தினசிங்கம், மற்றும் திருமதி இராஜேஸ்வரி சடாச்சரம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகொதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 10.00 மணியளவில் சிறுப்பிட்டி மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சிறுப்பிட்டி குடும்ப இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி
நீர்வேலி

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 137 1938**

(CS 888) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

துள்ளார். கார் மற்றும் சைக்கிள் என்பன விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் (வயது - 56) என்பவரே உயிரிழந்தவராவார். காரைச் செலுத்திவந்த சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-316)

## திஸ்ஸ...

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் பிமல் ரத்நாயக்க வடக்குக்கு விஜயம் மேற்கொண்டு தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில், இலங்கையிலுள்ள மிகப்பெரும் தமிழ்க்கட்சி தேசியமக்கள் சக்தியே என்று கூறியிருக்கின்றார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் 19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். தேசிய மக்கள் சக்திக்கு வெறும் எட்டு ஆசனங்கள் மாத்திரமே கிடைத்திருந்தன. இவ்வாறான நிலையில் தங்களுக்கு மாத்திரம்தான் வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்து ஆணை வழங்கியுள்ளனர் என்ற அடிப்படையில் தேசியமக்கள் சக்தியினர் கூறுவதிலிருந்தே அவர்களிடம் நேர்மை இல்லை என்பது புலப்படுகின்றது. எட்டு ஆசனங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு மிகத் தவறானதொரு கருத்துருவாக்கத்தைச் சர்வதேச மட்டத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்து வருகின்றது.

தேசியமக்கள் சக்தியினரின் இவ்வாறான கருத்துருவாக்கங்களைத் தோற்கடிப்பதற்காகத்தான் எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டுமென எங்கள் மக்களிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் முன்வைத்துவருகின்றோம்.

'சிறுசிறு விடயங்களுக்கும் தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டிருக்கும் உதிரிக் கட்சிகள் இனவாதத்தைத் தூண்டி தமிழ் மக்களைக் குழப்புகிறார்கள்' என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார். இந்தக் கருத்து அவரது இயலாத் தன்மையைக் வெளிக்காட்டுவதாகவே உள்ளது. நீங்கள்தான் இலங்கையிலேயேமிகப்பெரிய கட்சி என்றால் வடக்கு, கிழக்கில் தற்போது காணப்படும் சிறுசிறு பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கலாமே. தையிட்டியில் தமிழ்மக்களின் காணிகள் சட்டவிரோதமாகப் பறிக்கப்பட்டு எந்தவிதமான அனுமதிகளும் இல்லாமலே சட்டவிரோத கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்கலாமே?

பிமல் ரத்நாயக்க இப்படிப்பட்ட கருத்துக்களைக் கூறுவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர் எங்களுடன் சகஜமாக உரையாடுபவர். எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரனின் நெருங்கிய நண்பர். நான் நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சில விடயங்களுக்காகச் செல்லும் போதெல்லாம் எழும்பி எங்களை வரவேற்பார். ஆனால், இன்று அவரது இத்தகைய கருத்துகள் அவரது இன்னொரு முகத்தை எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவைத் சிங்கள மக்கள் அறிந்துகொள்ள இரண்டு வருடங்கள் எடுத்தது. எனினும், தமிழ்மக்களுக்கு அவரைப் பற்றித் தெரியும். எனினும், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியைப் பற்றித் தமிழ்மக்கள் ஆறு மாதங்களிலேயே நன்கு அறிந்துள்ளனர் - என்றார். (அ-ம-66-26)

## அநுர...

ஒருவாறாகவும் நடந்துகொள்கின்றனர் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்துமாறுகோரி கிளிநொச்சி மாவட்ட காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே, இலங்கை அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாடு தொடர்பில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

படையினரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்களையும், காணாமலாக்கப்பட்ட உறவுகளையும் நாங்கள் மிக நீண்டநாள்களாகத் தேடிவருகின்றோம். கிட்டத்தட்ட மூவாயிரமாவது நாளை எமது போராட்டம் அண்மித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், எமக்குரிய பதில் இன்னமும் வழங்கப்படவில்லை.

கடந்த அரசாங்கங்களைப் போன்று செயற்படமாட்டோம் என்றும், காணாமலாக்கப்பட்டோரின் விடயத்துக்கு நீதி வழங்கப்படும் என்றும் தேசிய மக்கள் சக்தியினர் எம்மிடத்தில் தெரிவித்தனர். ஆனால், சர்வதேசத்துக்கான அவர்களின் பதில் வேறு மாதிரியாக உள்ளது. எமக்கு ஒரு முகத்தையும், சர்வதேசத்துக்கு இன்னொரு முகத்தையும் காண்பித்துக்கொண்டிருக்கின்றனர். உண்மையில் மிகத்தவறான ஓர் அணுகுமுறையை தற்போதைய அரசாங்கத்தினர் பின்பற்றிவருகின்றனர். எமக்கு ஏமாற்றமே மிச்சமாகியுள்ளது - என்றனர். (அ-ம-113)

## இணையக்...

எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இணையக் குற்றப் பிரிவு நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் அண்மைக்காலமாக இணையக் குற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றன. எனவே, இந்தக் குற்றங்களை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான அவதூறுகள், பாலியல் கருத்துக்கள், இணைய மோசடிகள், ஆபாசப் பரிமாற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிரான நீதிக்காக இவ்வளவு காலமும் கொழும்புக்குச் செல்ல வேண்டிய நிலையே இருந்தது. இதனால், காலதா[illegible] பெரும் அலை[illegible] சந்திக்கவேண்டியிருந்தது.

இவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொண்டே, தற்போது வடக்கில் இணையக் குற்றப் பிரிவு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. வடக்கிலுள்ளவர்கள் இனி வரும் காலத்தில் மிக இலகுவாக இணையக் குற்றங்களுக்கு எதிராக நீதியைப் பெறமுடியும். அத்துடன், இதுவரை வடக்கில் இருந்து பதிவாகி காத்திருப்புப் பட்டியலில் உள்ள இணையக் குற்றம் தொடர்பான விசாரணைகள் விரைந்து முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## ஆர்ப்பாட்டங்களுக்கு...

போதிலும் அந்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெறும் தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி அநுர கலந்துகொள்ளவுள்ளார். ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, காணாமலாக்கப்பட்ட உறவுகளால் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்குத் தடைகோரியே பொலிஸார் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

எனினும், பொலிஸாரின் கோரிக்கையை ஏற்பதற்கு நீதிமன்றம் மறுத்துள்ளது. 'அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மக்களுக்கு உள்ள உரிமையாகும். ஆதலால், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவேண்டாம் என்று மக்களுக்கு உத்தரவிடமுடியாது. அமைதிக் குப்பங்கம் ஏற்படும் வகையில் ஏதாவது செயற்பட்டால், அதற்கெதிராக பொலிஸார் நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்' என்று நீதிமன்றம் தனது உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம-110)

## 20 கிலோ...

பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் உள்ள வீடொன்றில் கஞ்சா பதுக்கப்பட்டுள்ளது என்று கிடைத்த இரகசியத்தகவலுக்கமைய மேற்கொண்ட தேடுதலின்போதே இந்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபரான பெண்ணுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-113)

## பஹல்காம்...

தொலைபேசியில் கலந்துரையாடலும் நடத்தியுள்ளார். நேற்று மாலை பிரதமர் மோடியைத் தொடர்புகொண்டு ஜனாதிபதி அநுர உரையாடியுள்ளார். இதன்போது, பகல்ஹாம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தாம் கண்டிப்பதாகவும், இந்த விடயம் தனக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்ததாகவும் அநுர தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலங்கை மக்களின் அனுதாபங்களையும் ஜனாதிபதி அநுர பதிவுசெய்துள்ளார். (அ-ம-இ)

## லொறியுடன்...

உத்தியோகத்தர் பாரவூர்தி ஒன்றுடன் [illegible] தொடர்ந்தே உயிரி[illegible] வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் லக்ஸ்மன் பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தவராவார். இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஹரிபிரசாத் மேற்கொண்டார். (அ-ம-110)

## யாழில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை நால்வர் சிக்கன்குனியா அறிகுறிகளுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் நால்வருக்கு சிக்கன்குனியா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கூடுதலான அவதானத்தைச் செலுத்தியுள்ளோம் - என்றார். (அ-ம-125)

## விசாரணைக்காக...

கூறப்படும் நிதிமோசடி தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது. இதற்காக, சாமர சம்பத் தஸநாயக்க கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில், ரணில் விக்ரமசிங்க கடந்த 10ஆம் திகதி சாமர சம்பத் தஸநாயக்கவின் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக ஏப்ரல் 17ஆம் திகதி தமது ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு ரணிலுக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தது.

எனினும், புத்தாண்டு காரணமாக ஏப்ரல் 17ஆம் திகதி தம்மால் முன்னிலையாகமுடியாது எனவும், பிறிதொரு திகதி வழங்குமாறும் தமது சட்டத்தரணி ஊடாக ரணில் கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்து, கடந்த 25ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

எனினும், தனது சட்டத்தரணி வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பிய பின்னர் முன்னிலையாகுவேன் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்தே, எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் விசாரணைக்காக ரணில் முன்னிலையாகுவார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## இன்று...

மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தேசிய மக்கள் சக்திக்காகத் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவதற்காகவே அவர் வருகை தரவுள்ளார்.

அத்துடன், அமைச்சர் பிமல் ரத்நாயக்க இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். தீவகப் பகுதிகளில் அவர் தீவிர பரப்புரைகளில் ஈடுபடவுள்ளார். பொதுத்தேர்தலின்போது வடக்கில் கிடைத்த ஆதரவை உள்ளூராட்சித் தேர்தலிலும் தக்கவைத்துக்கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தி தீவிரம் காட்டிவருகின்றது. அண்மைக்காலமாகத் தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்டப் பிரமுகர்கள் வடக்குக்குத் தொடர்ச்சியாகப் பயணம் மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44-26-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷானியின் நியமனம் முறையானது அல்ல!

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் ஷானி அபயசேகர உள்ளடக்கப்பட்டுள்ளமை முற்றிலும் பொருத்தமற்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
சமூகவலைத்தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஷானி அபயசேகரவின் நியமனம் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்ட ஒருவரை ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரை, சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட ஒருவரை இந்த குழுவின் முக்கிய பொறுப்புக்கு நியமித்துள்ளமை முற்றிலும் பொருத்தமற்றது. சட்ட ரீதியான முடிவுகள் நியாயமான விதத்தில் எடுக்கப்படுவது மாத்திரம் முக்கியமானதல்ல, நீதித்துறையின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்கு அவ்வாறான முடிவுகள் வெளிப்படையானதாக நியாயமானதாக எடுக்கப்பட்டன என்பதை மக்கள் உணர்வதும் அவசியம். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களிற்கு வெளிப்படையான நம்பகமான நியாயமான செயன்முறை தேவை-என்றார். (ஏ-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உடுவில் டச்சு வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- உடுவில் மகளிர் கல்லூரி அருகாமையில் 150m
- சிறந்த சூழல்
- நல்ல தண்ணீர்
- காணியினுள் பழையவீடு ஒன்று உள்ளது.
- மருதனார் மடம் சந்தை 1Km
- தரகர் தேவையில்லை
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 711 5438, 074 339 5269
(CS/58080) J-1


### நுளம்பு பெருகும் சூழல்

## 3 குடியிருப்பாளர்களுக்கு ரூ. 22,500 தண்டம்!

வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்பு பெருக்கக்கூடியவாறு சூழலினை வைத்திருந்த 3 குடியிருப்பாளர்களுக்கு 22,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த வருடம் வல்வெட்டித்துறை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல்செய்யப்பட்ட இந்த வழக்கு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே 3 குடியிருப்பாளர்களுக்கும் தலா 7ஆயிரத்து 500 வீதம் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-26)

### மறைந்த திருத்தந்தைக்கு

## யாழ். பேராலயத்தில் இன்று இரங்கல் திருப்பலி

யாழ்ப்பாணம், ஏப். 26
கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி காலமான திருந்தந்தை பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனைகள் இன்று சனிக்கிழமை வத்திக்கானில் நடைபெறவுள்ள நிலையில் திருத்தந்தை யின் ஆன்ம இளைப்பாற்றுக்கான இரங்கல் திருப்பலி யாழ். பேராலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. குருக்கள், துறவிகள், இறைமக்களுடன் இணைந்து ஆயர் பேரருட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை குறித்த திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளார். (ச-25)


## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m லும் தூரத்தில், நல்ல நீர்க்கிணறு, வருமானங்களும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. குடியிருப்புச்சூழல்.
5 பரப்புக் காணி.
தொடர்புகளுக்கு:-
076 755 8606, 077 638 5683
(CS/3025A) J-1


## தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஏப்.26
உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாபெரும் பொதுக்கூட்டம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.
முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர். (ச-33-66)


## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் கோயில் இருந்து 400m தூரத்தில் 4 அறைகள், 2Hall, Kitchen உடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு
(மாதவாடகை 50,000/=)
தொடர்புகளுக்கு: 077 306 8993, 077 457 3266

## பணிநிலை வேண்டுகை




யாழ் நகரில் இயங்கும் உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவை

1) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
(வாகன சாரதி அனுமதி பத்திரமுடையவர்கள்)
2) பக்க வடிவமைப்பாளர்கள் (Graphic Designer)
(ஆண், பெண் இருபாலாரும் - பகல்/இரவு)
3) வரவேற்பாளர்கள் - (ஆண், பெண் இருபாலாரும்)

ஆர்வமுள்ளவர்கள்
26.04.2025 - சனிக்கிழமை
நேர்முகத்தேர்வுக்கு நேரில் சமூகமளிக்கவும்.
உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.



"நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 535 7803

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு

செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?
கவலை வேண்டாம்



ரூபா 9999/- மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். யாழ்ப்பாணம் முல்லைத்தீவு வவுனியா கிளிநொச்சி மன்னார் போன்ற அனைத்து இடங்களுக்கும் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்
முற்பதிவு செய்ய மற்றும் மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
077 434 6245
(CS/58089) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.